DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Ms.Ba.Dhaarani, B.S.L., L.L.B., D.T.L.,**
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | CC.No.267/2017 |
| Deposition of Witness for Complainant: | Pw1 |
| Name: | திரு. மாரியப்பன் |
| Father's /Husband Name: | த.பெ.ராஜாராமன் |
| Village: | கீழ்அனுபம்பட்டு |
| Taluk: | |
| Caste | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 08.11.2023.** | |

A1, A2, A4 present. Case aganist A3 and A5 split up and transferred to JJB, Cuddalore.

**முதல் விசாரணை**:

நான் கீழ்அனுபம்பட்டில் குடியிருந்து வருகிறேன். நான் சிவில் இன்ஜினியர் முடித்துவிட்டு சைட் இன்ஜினியராக காஞ்சிபுரத்தில் வேலை பார்த்து வந்தேன். தற்போது நான் வீட்டில் இருந்து கான்டிராக்டர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 19.01.2014 ந் தேதி காலை 8.00 மணியளவில் நான் முட்லூர் சொஸைட்டியில் பால் கொடுத்துவிட்டு ஆஜர் 1வது எதிரி கிருஷ்ணமூர்த்தியின் வீட்டு வழியாக வந்துக்கொண்டிருந்தபோது எங்களுக்கும் கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தாருக்கும் ஏற்கனவே இருந்த பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முன் விரோதத்தை மனதில் கொண்டு என்னை 1வது எதிரி கிருஷ்ணமூர்த்தி வழியை மறித்து ஆஜர்-1வது எதிரி என்னை தேவிடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார். 1- வது எதிரி கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவரது கையில் இருந்த கட்டை கழியால் எனது இடதுகை தோள்பட்டையில் அடித்தார். 1வது எதிரியின் மகன் தர்மராஜ் என்பவர் இரும்பு பைப்பால் எனது வலது பக்க கையில் அடித்தார். ஆஜர் 4-வது எதிரி கிருஷ்ணவேணி கல்லால் எனது தலையில்

அடித்தார். ஆஜர் 2-வது எதிரி சரஸ்வதி எனது வலது பக்க கையில் கடித்தார். சிவகாமி என்பவர் அவரது கைகளால் எனது முதுகில் அடித்தார். 1-வது எதிரி கிருஷ்ணமூர்த்தி இந்த பக்கம் இனி மேல் நீ வந்தால் உன்னை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார். 1-வது எதிரி மிரட்டும் போது மற்ற எதிரிகளும் கட்டை ,கழிகளுடன் இருந்தார்கள். மேற்படி சண்டையை நிஷாந்தின் தந்தை முருகன், அம்சவள்ளியின் மகன் பாஸ்கர் மற்றும் ஊர்க்காரர்கள் பார்த்தார்கள். என்னை பாஸ்கர் என்பவர் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். சிதம்பரம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த போது நான் போலீஸாரிடம் சொல்ல சொல்ல எழுதி அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் வாக்குமூலம் பு.சா.ஆ.1 ஆகும்**). மேற்படி சண்டையை ராமதாஸ் மகன் ஆதிதரன், செல்வகுமார் ஆகியோர்களும் பார்த்தார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

புகார்தாரர் தரப்பு மற்ற சாட்சிகளின் விசாரணைக்காக மற்றொரு தேதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-Ms.Ba.Dhaarani)
J.M.No.I, Chidambaram